2013 ஏப்ரல் 8]

வேலைவாய்ப்பு வழங்குகிற நிலையை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள். (மேசையை தட்டும் ஒலி). அதன் அடிப்படையிலே, விழுப்புரம் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாகக் கருத்துரு பெற்று, அங்கே படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிற நிலையை உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—50

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில், கடந்த 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17, 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், வேலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவப்படும் என ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, வேலூரிலே அதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய, சென்னையிலுள்ள ஒரு நிறுவனத்திற்குப் பணி ஆணை கடந்த ஆண்டு டிசம்பர் 21ஆம் தேதி அன்று அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிறுவனத்திடமிருந்து அனைத்து ஆவணங்களும் பெற்று, வேலூர் மாவட்டத்திலே படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவார்கள் என்பதையும் இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

176—

அரசு விழா

***28357—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை, வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு தினத்தை அரசு விழாவாக நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை, வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு தினத்தை அரசு விழாவாக அறிவிக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் வேலுநாச்சியாராக வாழ்ந்துகொண்டு, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டு வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மாவட்டம், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவுச் சின்னத்தை நிறுவுவதற்காக ரூ.60 இலட்சத்தை ஒதுக்கித் தந்து, அதற்கான இடத்தையும் ஆய்வு செய்து, அங்கு மணிமண்டபம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டுவரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அங்கு வேலுநாச்சியாருடைய நினைவுச் சின்னம் அமைகின்றபோது, வேலுநாச்சியார் அவர்களின் நினைவு தினத்தை அரசு விழாவாக எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களையும், தமிழ் மொழி வளர்ச்சிக்காக உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது தியாகங்களையும், பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச்*

2013 ஏப்ரல் 8]

செய்யும் நோக்கத்தோடு அவர்களது பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. அன்றைய தினத்தில் அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் அரசின் சார்பில் மாலைகளை அணிவித்தும், சிலைகளுக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தப்படுகிறது. இத்துறையால் சென்னையில் 27 விழாக்களும், மாவட்டங்களில் 20 விழாக்களும் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், கேட்பவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று பார்க்காமல், சிவகங்கை, வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட வேண்டுமென்று, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் கேட்டவுடன், உடனடியாக சட்டமன்றத்தில் அவர்கள் எழுந்திருந்து வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக பணிகளை மேற்கொள்ள சுமார் ரூ.60 இலட்சம் செலவிலே நினைவுச் சின்னம் அமைக்க உத்தரவிட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தற்போது வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு தினத்தை அரசு விழாவாக அறிவிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் எழவில்லை என்பதை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்துத்தர 60 இலட்சம் ரூபாய் வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கு சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பாகவும், சிவகங்கை மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு தினத்தை அரசு விழாவாக எடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி, அரசு விழா எடுக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுடைய பணியாளராக வீற்றிருந்த குயிலி என்ற ஆதிதிராவிடப் பெண் தன்னுடைய உடலில் நெய்யை பூசிக்கொண்டு வேலுநாச்சியார் அவர்களைக் கொல்வதற்காக வந்த படையின் ஆயுதக் கிடங்கில் குதித்து, தன்னுடைய இன்னுயிரை ஈந்த அந்த ஆதிதிராவிட குயிலி என்ற பெண்ணுக்கு ஒரு நினைவுத் தூண் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—55

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கைப் போரிலே வெள்ளைக்காரர்களை எதிர்த்து நின்று போரிட்டு வெற்றி பெற்றவர் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள். அவருடைய பெருமையை, புகழைப் பறைசாற்றும்விதமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.60 இலட்சம் செலவிலே நினைவு மண்டபம் அமைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். தற்போது வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு தினத்தை அரசு விழாவாக அறிவிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா,